**News Release/ Communiqué**

Ontario

Office of the Premier

Cabinet du Premier ministre

உடனடிச் செய்தி வெளியீட்டுக்காக
ஜூன் 15, 2007

## வேகப் போக்குவரத்துக்கான மக்கின்ரி அரசாங்கத்தின் செயற்பாட்டுத் திட்டம் பொருளாதாரத்தை முன்னோக்கி நகர்த்தும்

**'மூவ்ஒன்ராறியோ 2020' என்பது ரொறோன்ரோ பெரும்பாகத்திலும் ஹமில்ரனிலும் 52 வேகப் போக்குவரத்து முன்னெடுப்புக்களை வழங்க இருக்கும் ஒரு 12 வருட நிர்மாணத் திட்டம்**

மிஸிஸ்ஸாகா - வாகன நெருக்கடிகளைக் குறைப்பதன் மூலம் வேலை வாய்ப்புகளையும் முதலீட்டினையும் வழங்கவல்ல பல்-வருட 17.5 பில்லியன் டொலர் வேகப் போக்குவரத்து செயற்பாட்டுத் திட்டம் ஒன்றை ரொறோன்ரோ பெரும்பாகத்துக்கும் ஹமில்ரனுக்கும் ஒன்ராறியோ அரசு ஆரம்பித்து வைப்பதாக இன்று மாகாண முதல்வர் மக்கின்ரி அறிவித்தார்.

" வலுவானதும் செழிப்பானதுமான பொருளாதாரத்தை நாம் கட்டி எழுப்புவதற்குச் செய்யக் கூடிய முக்கிய விடயங்களில் ஒன்று வாகனநெரிசலை நாம் சமாளிப்பது" என்று மக்கின்ரி கூறினார். " மக்களையும் பண்டங்களையும் விரைவாகவும் திறமையாகவும் நகர்த்தும் ஒரு நவீன வேகப் போக்குவரத்துத் தொகுதி ஒன்றினைக் கட்டி எழுப்புவது பல்லாயிரக்கணக்கான நல்ல உயர் சம்பள வேலை வாய்ப்புக்களை நாம் கவர்ந்தும் வைத்தும் கொள்ளும் என்பதை உறுதிப்படுத்தும்."

'மூவ்ஒன்ராறியோ 2020' 2008 தொடக்கம் 920 கிலோ மீற்றர் தூரமான புதிய அல்லது முன்னேற்றகரமான வேகப் போக்குவரத்தைக் கட்டியெழுப்பும்.

நிர்மாணத்தின் போது 175,000 வேலைகளை உருவாக்கி 52 வேகப் போக்குவரத்து செயல்திட்டங்களையும் வழங்கும். இவை பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

- யங் வீதி நிலக்கீழ் ரயில் பாதையை நெடுஞ்சாலை 7 வரை நீட்டித்தல்
- 'க்கோ' லேக்ஷோர் வழியை மின்மயமாக்கி அதன் வேகத்தைக் கூட்டி வெளியேறும் வாயுக்களைக் குறைத்தல் மற்றும் எல்லா 'க்கோ' வழிகளினதும் ஆள் கொள்அளவினைக் கூட்டுதல்
- நெடுஞ்சாலை 407 ஊடான கடுகதிப் பேரூந்து சேவையை விரிவு படுத்தல்
- ஹமில்ரன் வழி ஊடாக இரண்டு வேகப் போக்குவரத்து வழிகள், மற்றும்
- நகரின் ஊடாக இலகு ரயிலுக்கான ரொறோன்ரோவின் *போக்குவரத்து நகர* தொலைநோக்கு

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ரொறோன்ரோ பெரும்பாகப் போக்குவரத்து அதிகார சபையுடன் (GTTA) அரசாங்கம் இணைந்து பணியாற்றும். முன்நோக்கிய நகர்வுக்கான ஒரு விரிவான திட்டம் குறித்து 2008 முற்பகுதியில் GTTA, மாகாண அரசுக்கு மீள் அறிக்கை சமர்ப்பிக்கும்.

"இத்தகைய அபிலாஷைமிக்க ஆனால் நடைமுறைச் சாத்தியமான முதலீட்டைச் செய்வதற்கு இதுவே தக்க தருணம் ஆகும். எமது பொருளாதாரம் இதற்கு நிர்ப்பந்திக்கின்றது" என்று மக்கின்ரி கூறினார். " மேலும் இதனைப் பெறுவதற்கு எமது குடும்பங்கள் தகுதி உடையன. ஏனெனில் வாகன நெரிசல் எமது பொருளாதாரத்தின் வலுவை உறிஞ்சி எடுப்பது மட்டுமன்றி எங்கள் குடும்பங்களின் நேரத்தையும் களவாடுகின்றது."

ஒரு உதாரணத்தைச் சுட்டிக் காட்டுவதாயின் 'க்கோ' லேக்ஷோர் வழியை மின்மயமாக்குவதன் மூலம் ரொறோன்ரொவிலிருந்து ஹமில்ரனுக்கு பிரயாணி ஒருவர் 15 நிமிடங்கள் விரைவாகப் போய்ச் சேருவார்.

" அது ஒரு நாளில் மேலதிகமான ஒரு அரைமணி நேரமாகும். உங்கள் மகளின் உதைபந்தாட்டப் போட்டியில் அவளின் முதல் க்கோலைத் தவற விடுவதற்கும் அல்லது அதனைப் பார்க்கக் கிடைப்பதற்கும் இடையிலான வேறுபாட்டை அது ஏற்படுத்தும்" என மக்கின்ரி கூறினார்.

" கடைசியாக இந்தச் செயல் திட்டம் எமது தெருக்களிலிருந்து 300 மில்லியன் கார் பிரயாணங்களை அகற்றும். நாங்கள் சுவாசிக்கும் காற்றுக்கும் - நாம் ஒன்றுபட்டுப் நிகழ்த்தும் காலநிலை மாற்றப் போராட்டத்துக்கும் இது நல்ல செய்தியாகும்." இந்த செயல் திட்டம் பண்ணிரண்டு வருடங்களில் எழுப்பப்படும் என்றும் 50 வருடங்கள் ஊடாக நிதியளிக்கப்படும் என்றும் போக்குவரத்து அமைச்சர் டோனா கான்ஸ்.ஃபீல்ட் கூறினார்.

"எமது போக்குவரத்துத் தொகுதியின் மாற்றியமைப்பு இரவோடிரவாக இடம் பெறாது. ஆனால் இது செயற்படுத்தப்பட வேண்டும்" என்று கான்ஸ்.ஃபீல்ட் கூறினார். " வாகன நெரிசலைக் குறைப்பதற்கும் எமது சூழலை முன்னேற்றுவதற்கும் என மக்களை அவர்களது கார்களிலிருந்து வெளி அகற்றி பொதுசன போக்குவரத்து முறைமைக்குள் இட்டுச் செல்லும் ஒரு நிலைபெறத்தக்க போக்குவரத்துத் தொகுதியை நாம் விருத்தி செய்ய வேண்டும்."

செலவின் ஆகக் குறைந்தது மூன்றிலொரு பகுதியையாவது பொறுப்பேற்குமாறு மத்திய அரசை மாகாண அரசு வேண்டுகின்றது. எஞ்சிய மூலதனச் செலவை மாகாண அரசு பொறுப்பேற்பதுடன் நடைமுறையிலுள்ள மாகாண எரிபொருள் வரித் திட்டத்தின் ஊடாக உள்ளூராட்சிச் சபைகளுடன் செயற்பாட்டுச் செலவுகளைத் தொடர்ந்து பகிர்ந்து கொள்ளும்.

"இன்றைய அறிவிப்பு பெருமளவில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. ரொறோன்ரோ பெரும் பாகத்திலும் ஹமில்ரனிலும் உள்ள மக்களின் அன்றாட வாழ்க்கையில் நல்ல முறையிலான தாக்கத்தை உருவாக்கும் பாரிய வாய்ப்பினை GTTA க்கு இது வழங்குகிறது" என GTTA இன் தலைவர் றொபார்ட் மக்ஜஸாக் தெரிவித்தார். "இது நிச்சயமாக நிலைபெறத்தக்க ஒரு போக்குவரத்துத் திட்டத்தை நோக்கிய முக்கிய திருப்பு முனையாக நிச்சயமாக நோக்கப்படும்."

ஏறக்குறைய 100 ஆயிரம் மக்களால் தனது சனத்தொகையையும் 50 ஆயிரம் கார்களையும் வருடாந்தம் அதிகரித்து வரும் ரொறோன்ரோ பெரும்பாகம் (ஜிரிஏ) வட அமெரிக்காவில் மிக வேகமாக வளர்ந்து வரும் பிரதேசங்களில் ஒன்றாகும். ரொறோன்ரோ பெரும்பாகத்தில் பிரயாணிப்பது தங்குதடையற்ற போக்குவரத்தினைவிடத் தற்போது 32 சதவீதம் கூடுதலான நேரத்தை எடுக்கின்றது. ரொறோன்ரோ பெரும்பாகத்தில் இடம்பெறும் சனநெரிசலின் பொருளியல் விலை வருடாந்தம் சுமார் 2.2 பில்லியன் டொலராகும். இப்பொழுது நடவடிக்கை மேற்கொள்ளப்படாவிடின் 2031ம் ஆண்டளவில் இது கிட்டத்தட்ட 4.1 பில்லியனாக அதிகரிக்கும்.

2015ம் ஆண்டளவில் இச் செயல் திட்டத்தின் 66 சதவீதம் பூர்த்தியாகும் எனவும் 2020ம் ஆண்டளவில் 95 சதவீதம் பூர்த்தியாகும் எனவும் இத்திட்டம் தெரிவிக்கின்றது. 300 மில்லியன் கார் பிரயாணங்களை ஜீரீஏ வீதிகளிலிருந்து அகற்றி வருடாந்தம் 800 மில்லியன் புதிய போக்குவரத்துப் பயணங்களை ஏற்படுத்துவதில் இது வந்து முடியும். 2020ம் ஆண்டளவில் இப்பிராந்தியத்தில் காபனீரொட்சைட் வெளியேற்றத்தை இது 10 மெகா தொன்களால் குறைக்கும்.

- 30 -

Disponible en français

மேலதிக தகவல்களுக்கு:
முதல்வரின் ஊடக அலுவலகம்
416-314-8975